## சென்ட்ரல் மெட்ரோ நிலையத்தில்

# பூமிக்கடியில் 100 கார்கள்– 300 'பைக்குகள்' நிறுத்தும் வசதி

## 2 வாரத்தில் செயல்பட தொடங்குகிறது

சென்னை, ஜன., 3–
சென்ட்ரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் பூமிக் கடியில் 100 கார்கள்– 300 'பைக்குகள்' நிறுத்தும் வசதி 2 வாரத்தில் செயல்பட தொடங்க உள்ளது.

### சென்ட்ரல் மெட்ரோ நிலையம்

சென்னை மாநகர போக்கு வரத்து நெருக்கடியை குறைப் பதற்காக மெட்ரோ ரெயில் திட்டம் உருவாக்கப்பட்டது. முதல்கட்டமாக 45 கி.மீட்டர் தூரத்துக்கு 2 வழித் தடங் களில் மெட்ரோ ரெயில் பாதை அமைக்கப்பட்டு மெட்ரோ ரெயில் பயணிகள் சேவை நடந்து வருகிறது. சென்ட்ரல் மெட்ரோ ரெயில் நிலையம் மிகப் பெரிய சுரங்க மெட்ரோ ரெயில் நிலையமாக கட்டப் பட்டு செயல்பட்டு வரு கிறது. தினமும் பல ஆயிரக் கணக்கான பயணிகள் சென்ட்ரல் மெட்ரோ ரெயில் நிலையத்துக்கு வந்து செல்கிறார்கள்.

### 100 கார் – 300பைக்குகள்

பயணிகள் வசதிக்காக சென்ட்ரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் பூமிக் கடியில் பிரமாண்ட வாகன நிறுத்துமிடம் அமைக்கப் பட்டுள்ளது.

இதில் ஒரே நேரத்தில் 100 கார்கள். 300 'பைக் குகள் நிறுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மெட்ரோ ரெயில் பயணிகள் தங்களது வாகனங்களை இங்கு நிறுத்திவிட்டு மெட் ரோ ரெயிலில் பயணம் செய்யலாம். இன்னும் 2 வாரத்தில் வாகன நிறுத்துமிடம் செயல் பட தொடங்குகிறது.

இது குறித்து மெட்ரோ ரெயில் அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

### 2 வாரத்தில் செயல்படும்

சென்ட்ரலில் மெட்ரோ ரெயில் பயணம் செய்ய வரும் பயணிகளுக்காக பூமிக் கடியில் ஒரே நேரத்தில் 100 கார்கள், 300 'பைக்'கள் நிறுத்தும் வசதி அமைக்கப் பட்டுள்ளது. இன்னும் 2 வாரத்தில் இது செயல்பட தொடங்கும். மெட்ரோ ரெயில் பயணத்துக்கு வரும் பயணிகள் தங்களது வாகனங் களை பூமிக்கடியில் உள்ள பிரமாண்ட வாகன நிறுத்து மிடத்தில் நிறுத்திவிட்டு எளிதில் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்யலாம். இவ்வாறு அவர் கூறினார்.